2013 ஏப்ரல் 30]

மருத்துவப் பிரிவுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா மற்றும் சித்த மருத்துவப் பிரிவுபோல், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஓமியோபதி மருத்துவப் பிரிவும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஆயுஷ்’ என அழைக்கப்படும் ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஓமியோபதி என ஐந்து வகையான இந்திய மருத்துவ முறையில் தமிழகத்திலுள்ள 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில், பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவம் மற்றும் ஓமியோபதி பிரிவுகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரச்சலூர், கொடுமுடி பகுதிகளிலே சித்த மருத்துவமனை மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை வேண்டுமென்று கோரியுள்ளார். ஆகவே, அத்தகைய பிரிவுகள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று எதிர்வருகின்ற காலங்களில் தேவைக்கேற்ப அவை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

சென்னை, வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

[2013 ஏப்ரல் 30

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மக்கள்தொகைப் பெருக்கம், அதிகரித்து வரும் வெளி மாநில மற்றும் பிற மாவட்ட மக்களின் புழக்கம், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வண்ணம் பேருந்து நிலையங்கள், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை அமைப்பதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், கோயம்பேட்டில் சென்னை புறநகர் பேருந்து நிலையம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேருந்து நிலையத்தில் ஒரே நேரத்தில் 180 பேருந்துகள் இயங்கவும், மேலும் இயக்கத்தில் இல்லாத 60 பேருந்துகளை நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு காலத்தில் இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தற்போது, தென் மாவட்டங்களுக்குச் செல்லும் 1,250 பேருந்துகள் உட்பட மொத்தம் 2,100 பேருந்துகள் தினம் சுமார் 2,900 தடவை இயக்கப்பட்டு வருகின்றன. இடப் பற்றாக்குறை காரணமாக இந்தப் பேருந்து நிலையத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கான பணிமனைகள் அமைக்கப்படவில்லை. இதன்காரணமாக பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகள் நாள் முழுவதும் பேருந்து இயக்குமிடம் மற்றும் சாலை ஓரங்களிலேயே நிறுத்தப்படுவதால் பேருந்துகள் நிலையத்திலிருந்து வெளியே செல்ல நீண்ட நேரமாகின்றது. பண்டிகை மற்றும் விடுமுறைக் காலங்களில் பயணிகளின் வசதிக்காக அதிக அளவிலான பேருந்துகள் இயக்கப்படுவதால் பேருந்து நிலையத்திற்குள்ளும், சுற்றுப் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

முற்பகல் 11-10

சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஒப்பந்தப் பேருந்துகளுக்கான பேருந்து நிலையம், கோயம்பேடு

மொத்த விற்பனை வணிக வளாகம் ஆகியவையும் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இதன் காரணமாக, வாகனங்கள் செல்லும் வேகம் மணிக்கு 10 கிலோ மீட்டர் என்ற நிலையில் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு வரும் மொத்த உணவு தானிய அங்காடி மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்கள் திறக்கப்பட்டால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கும்.

கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், இங்கிருந்து செல்லும் பேருந்துகளில் பாதிக்கு மேல் தென் மாவட்டங்களுக்குச் செல்பவையாக இருப்பதைக் கருத்தில்கொண்டும், தென் மாவட்டங்களிலிருந்து வந்து செல்லும் பேருந்துகளுக்கென தெற்கத்திய பெருஞ்சாலை மற்றும் வெளி வட்டச்சாலை ஆகியவற்றிற்கு இடையே வண்டலூர்-வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலையையொட்டி வண்டலூர் இரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வண்டலூரில் புதியதாக உருவாக்கப்படும் இந்தப் புறநகர் பேருந்து நிலையத்தில், புறநகர் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், மாநகரப் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், வாகனங்கள் நிறுத்துவதற்குத் தேவையான இடம், போக்குவரத்துப் பணிமனை வசதிகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுமக்களுக்குத் தேவையான உணவகங்கள், சிறு கடைகள், பொதுக் கழிப்பிட வசதி ஆகிய எல்லா வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இத்திட்டத்தின்மூலம் கோயம்பேட்டின் தற்போதைய நெரிசல் விலகி பயணிகள் எளிதாகவும், வசதியாகவும், விரைவாகவும் பயணிக்க வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)